'பொருநை அருங்காட்சியகம்' திறப்பு விழா உள்ளிட்ட – முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில்

# நெல்லை மேற்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்போம்! வாரீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!



நெல்லை, டிச.. 20 -

முதலமைச்சர் கழகத்தலைவர், அன்புத்தளபதியார் அவர்கள் இன்று 2012 - 2025 மற்றும் 21.12.2025 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள். நிகழ்ச்சிகளில் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்பீர். என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு இன்று (20.12.2025) மாலை டக்கரம்மாள்புரத்தில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் நடத்தும், மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா விழா மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தர உள்ளார்கள்.

அதனை தொடர்ந்து 21.12.2025 காலை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்கள். அதன் பின்னர் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடத்தை திறந்து வைத்த பின்னர் திரு நெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மாபெரும் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் இரண்டு நாள் நிகழ்ச்சி களிலும், திருநெல்வேலி மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை உள்ளிட்ட அமைப்புகளின் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தோழர்கள் மாநில, மாவட்ட சார்பு ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், ஊரக, நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் பொது உறுப்பினர்கள் திரளாக பங்கேற்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

தமிழரின் தொன்மை நாகரிகத்தை உலகிற்குப் பறைசாற்றும் 'பொருநை அருங்காட்சியகம்' திறப்பு விழா!

# முதல்வரை வரவேற்க - நெல்லை கிழக்கு மாவட்டத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள்!



நெல்லை, டிச. 20 -

நெல்லைக்கு இன்று (20 ஆம் தேதி) வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களை வரவேற்க கழகத்தினர் திரளாக வர வேண்டும். என நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

நம் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பல்வேறு முடிவுற்ற பணிகளை துவக்கி வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டிட இன்று (20) மற்றும் நாளை (21 ஆம் தேதிகளில்) நெல்லைக்கு வருகை தருகிறார்கள். முக்கிய நிகழ்வாக நெல்லை ரெட்டியார்பட்டியில் ரூபாய் 67.25 கோடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகம் முதல்வரின் பொற்கரங்களால் மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட இருக்கிறது.

தமிழர்களின் நாகரிகத்தை உலகுக்கு பறைசாற்றும் விதமாக மதுரை கீழடியை தொடர்ந்து நமது பொருநையாம் தாமிரபரணி தீரத்தில் சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு மூலம் கிடைக்கப் பெற்ற அரிய பொருட்களை காட்சிப்படுத்தியும், வரலாறு கூறும் அரங்குகளுடன் நெல்லை ரெட்டியார்பட்டியில் ரூபாய் 67.25கோடி மதிப்பீட்டில் நம் முதல்வர் அவர்கள் பொருநை அருங்காட்சிய கம் அமைத்திருக்கிறார்கள். அகத்தியமும், தொல்காப்பியமும் உலகின் மிக மூத்த இலக்கண நூல்களாக அறியப்படுவது போல உலக வரலாற்று ஆய்வாளர்களின் மொத்த கவனமும் இனி முதல்வர் அவர்களின் முன்னெடுப்பால் தமிழ்நாட்டை நோக்கி திரும்பும். நெல்லையின் புகழை குன்றின் மேல் விளக்காய் ஒளி வீசச் செய்ய 20 ஆம் தேதி நெல்லை மண்ணிற்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்க அணி திரள்வது நெல்லை மக்களின் கடமையாகும்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பாளையங்கோட்டை சாரதா கல்லூரி அருகில் இன்று 20ம் தேதி காலை 11 மணிக்கு திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகிறது. ஆகையால் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,

(BLA2) (BDA) (BLC) கழக நிர்வாகிகள், மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நிறைவு!

# இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, டிச. 20-

நாடாளுமன்றக கூட்டத்தொடர் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. அவை மரபுகளை மீறி மக்களவை ஒத்திவைக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் ஒன்றாம் தேதி தொடங்கியது. இதுவரை இல்லாத விதமாக குறுகிய நாட்களில் இந்த கூட்டத்தொடர் நடத்தப்பட்டது. SIR உள்ளிட்ட நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. முக்கியமாக மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை சீர்குலைக்க, காந்தியின் பெயரை நீக்கி விட்டு புதிய திட்ட மசோதாவை கடும் எதிர்ப்பையும் மீறி, ஒன்றிய அரசு நேற்றைய தினம் நிறைவேற்றியது. அணுமின் உற்பத்தியில் தனியாருக்கு அனுமதி வழங்குவது உள்ளிட்ட சர்ச்சைக்குரிய மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டன. கடைசி நாளான இன்று மக்களவை கூடிய சில நிமிடங்களில் தேதி குறிப்பிடாமல் அவை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். இறுதிநாளில் அவை மரபுகளை மீறி மக்களவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.


**ஒன்றிய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முழக்கம்!**

இதைத்தொடர்ந்து, நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 100 நாள் வேலை திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தி பெயரை நீக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு எதிராக முழக்கமிட்டனர். கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்ந்த திட்டத்தை நீக்கியது, மாநிலங்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், ஏழை மக்களை கடுமையாக பாதிக்கும் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**தேவதானப்பட்டி தே.க. இராஜேந்திரன்**
**டிசம்பர் 20 (1996)**



கழகம் தொடங்கிய காலம் முதல் உறுப்பினராகி, நாடகத்தின் மூலம் கழகக் கொள்கைகளைப் பரப்பி, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி கிளைச் செயலாளராகவும் – பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---